www.tamilarangam.net

## யாழ். பல்கலைக்கழக மாணவன்

# றயாகரன் விவகாரம்: ‘புலிகள்’ விளக்கம்

(அலுவலக நிருபர்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப மாணவன் பி. றயாகரன் தமது கல்வியைத் தொடருவதற்கு எந்தவித அச்சுறுத்தலும் எம்மால் இருக்க மாட்டாது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் ‘மாத்தயா’ உறுதியளித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவன் பி. றயாகரன் விவகாரம் சம்பந்தமாக, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நேற்றுக்காலை மாணவர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் குழு சார்பாக செல்வி உ. ஒளவை இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ் பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் சார்பில் பிரதி தலைவர் திரு. மாத்தயா, அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. திலீபன் உட்பட பல பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.

திரு. மாத்தயா, தங்கள் நிலைப்பாட்டை விளக்கி பேசுகையில் கூறியதாவது:

‘மாணவன் றயாகரனை நாங்கள் கடத்தவில்லை; கைது செய்தோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற எங்களுக்கு, சமூக விரோத செயல்களிலீடுபட்டிருந்தோரைக் கட்டுப்படுத்தும் கடமைப்பாடு இருந்தது. கடந்த ஏப்ரல் 18-ம் திகதி பணத்தைக் கொடுத்து ஆயுதம் வாங்க முயற்சித்த சமூக விரோதியைக் கைது செய்தோம். அவரைக் கைது செய்து விசாரணை நடாத்திய பொழுது அவர் தந்த தகவலின்படி றயாகரனைக் கைது செய்தோம்.

‘சட்டவிரோத ஆயுதப் பரிமாற்றம் சம்பந்தப்பட்ட நபர்களில் றயாகரன் 6-வது நபர். இவரை ஏப்ரல் 28-ல் கைது செய்தோம். இவரிடமிருந்து கைத்துப்பாக்கியும் 154 ரவைகளும் கைப்பற்றினோம். இவர் ஒரு இயக்கத்தின் நீண்டகால உறுப்பினர். தற்போது அந்த இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருக்கிறார்.

மாணவர்கள் விடுத்த கோரிக்கைக்கிணங்க மீண்டும் அவர் கல்வியைத் தொடர எந்த விதமான அச்சுறுத்தலும் எம்மால் இருக்க மாட்டாது’.

இவ்வாறு திரு மாத்தயா உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து றயாகரன் இக்கூட்டத்திலிருப்பதாகவும் அவரைப் பேசவிடுமாறும் கூட்டத்திலிருந்து கோரிக்கை எடுக்கப்பட்டது.

தலைவர் அப்போது எழுந்து அவரைப் பேசுவதற்கு மாணவர்கள் அனுமதித்தால் அவர் இங்கு வந்து பேசலாம் என்று தெரிவித்தார்.

அச்சமயம் திரு மாத்தயா எழுந்து, ‘உறுதிமொழி கொடுக்கத்தான் நாம் இங்கு வந்தோம், அதனைக் கொடுத்து விட்டோம்’ என்று தெரிவித்து மடையிலிருந்து இறங்கிச் சென்றார். அவருடன் விடுதலைப் புலிகளின் ஏனைய உறுப்பினர்களும் சென்றனர்.

மாணவன் றயாகரன் மேடையில் தோன்றி தன் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துப் பேசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்